வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 9.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் சுகாதார கட்டமைப்பு கடந்த சில ஆண்டுகளில் வலுவடைந்து உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் மேற்காசிய நாடுகளில் நிலவும் தற்போதைய சூழ்நிலை குறித்து வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அறிக்கை தாக்கல் செய்தார்.

பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் கட்ட அமர்வு இன்று தொடங்கியது.

காரைக்கால், பேரளம் இடையே பயணிகள் ரயில் இயக்க வேண்டும் என மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவிடம் மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் கோரிக்கை வைத்துள்ளார்.

மோடி

இந்தியாவின் சுகாதார கட்டமைப்பு கடந்த சில ஆண்டுகளில் வலுவடைந்து உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சப்கா சாத் -சப்கா விகாஸ் என்ற தலைப்பில் நடைபெற்ற பட்ஜெட்டிற்கு

பிந்தைய இணைய வழி கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது என்பது வெறும் விவாதத்திற்கு உரியதாக அல்லாமல் பட்ஜெட்டின் அடித்தளமாகவும் அரசாங்கத்தின் முன்னுரிமையாகவும் இருக்கிறது என்றார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு..........

(வாய்ஸ்)

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுதல் என்பது குறித்து இன்று நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் நாடு முழுவதும் நூற்றுக் கணக்கான புதிய மருத்துவ கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் நோய் தடுப்பு மற்றும் முழுமையான சுகாதாரத்தை நோக்கிய தொலைநோக்கு பார்வையுடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். ஆயுஷ்மான் பாரத் திட்டம் மற்றும் ஆரோக்கிய மந்திர் மூலம் நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இந்தியாவின் யோக பயிற்சிகள் மற்றும் ஆயுர்வேத மருந்துகள் உலகம் முழுவதும் பிரபலம் அடைந்து வருவதாக தெரிவித்தார். மருத்துவ பொருளார கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திய பிரதமர் சிறப்பு மருத்துவ சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உலகளாவிய தேவை இருப்பதையும் எடுத்துக் கூறினார். மாறிவரும்

உலகத்திற்கு ஏற்ப நமது கல்வி திட்டத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமான ஒன்று என பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். செயற்கை நுண்ணறிவு தானியங்கி தொழில் நுட்பம் மின்னணு பொருளாதார கட்டமைப்பு மற்றும் உலக தரத்திலான உற்பத்தி போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியில் விளையாட்டுத் துறை முக்கிய பங்காற்றி வருவதால் விளையாட்டு கட்டமைப்பை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

*ஜெய்சங்கர்*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆவது அமர்வு இன்று தொடங்கியது. மாநிலங்களவையில் வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மேற்காசிய நாடுகளில் நிலவும் தற்போதைய சூழ்நிலை குறித்த அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார். அந்த அறிக்கையில் மேற்காசிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதற்கான முயற்சிகள் குறித்து அவர் விரிவாக தெரிவித்தார். தூதரக ரீதியிலான அணுகுமுறைகளும் சமரச பேச்சு வார்த்தைகளும் மேற்காசிய நாடுகளில் இயல்பு நிலை திரும்புவதற்கு உதவும் என்பது குறித்தும் அவர் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின்

தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் மேற்காசிய மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியர்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள நிலைமைகளை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்றும் அந்நாடுகளில் உள்ள இந்தியர்களுக்கு உதவும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். வளைகுடா நாடுகளில் 1 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருவதாக தெரிவித்துள்ள அவர் கப்பல் போக்குவரத்து பணிகளில் அதிக அளவிலான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் பணியாற்றி வருவதாகவும் கூறினார். மேற்காசியா மற்றும் வளைகுடா நாடுகளில் பாதுகாப்பு நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் இதுதொடர்பாக இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் கூறினார். இந்தியர்களை தாயகம் அழைத்து வருவதற்கு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்தும் அவர் தெரிவித்தார். இந்த அறிக்கையை மக்களவையிலும் டாக்டர் ஜெய்சங்கர் தாக்கல் செய்தார்.

*அவை ஒத்திவைப்பு*

பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் கட்ட அமர்வு இன்று தொடங்கிய நிலையில் மக்களவையில் மேற்காசிய நிலமை குறித்து விவாதிக்க

வலியுறுத்தி எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 3 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. முதல் ஒத்தி வைப்பிற்கு பின்னர் நண்பகல் 12 மணிக்கு அவை கூடியதும் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெயங்கர் மேற்காசிய நிலைமை குறித்து தானாக முன் வந்து அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார். அப்போது காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி மற்றும் பிற எதிர்கட்சி உறுப்பினர்கள் பதாகைகளை கையில் ஏந்தி அவையின் மையப் பகுதிக்கு வந்தனர். அப்போது அவையை நடத்திய திரு ஜெகதாம்பிகா பால் பதாகைகளை ஏந்தி செல்வது அவை விதிகளுக்கு முரண் ஆனது என்று தெரிவித்தார். அதேநேரம் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ எதிர்கட்சிகள் அவையில் நடந்து கொண்ட விதம் குறித்து குற்றம் சாட்டினார். தனது வாழ்நாளில் இதுபோன்ற பொறுப்பற்ற எதிர்கட்சிகளை தாம் இதற்கு முன்பு பார்த்தில்லை என்றும் தெரிவித்தார். மக்களவை சபாநாயகருக்கு எதிரான தீர்மானம் குறிந்து எதிர்கட்சிகள் அளித்துள்ள நோட்டீஸ் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது என்றும், கூறிய அவர் ஆனால் எதிர்கட்சிகள் குழப்பத்தில் இருப்பதால் வேறு பல பிரச்சனைகள் குறித்து விவாதிக கோரிக்கை வைப்பத் தாகவும் தெரிவித்தார். தொடர்ந்து எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவை நடவடிக்கைகள் பிற்பகல் 3 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன. பிற்பகல் 3 மணிக்கு மக்களவை கூடிய போது எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாளை காலை 11 மணி வரை

அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக மக்களவை இன்று காலை 11 மணிக்கு கூடிய போது ஷில்லாங்கைச் சேர்ந்த தற்போதிய நாடாளுமன்ற உறுப்பினரும் Voice of the people கட்சியின் தலைவருமான டாக்டர் ரிக்கி ஆன்ட்ரூ ஜே சிங்கோன் மறைவிற்கு உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர். மேலும் முன்னாள் உறுப்பினர்களான குமாரி சுஷிலா திரியா தேவி பக்ஸ் சிங், பூர்ணமாசி ராம் மற்றும் கேபி உன்னிகிருஷ்ணன் ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்திய பின்னர் அவை நடவடிக்கைகள் நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஜெயக்குமார்

புதுச்சேரி அரசின் சமூக நலத்துறை மூலம் மங்கலம் தொகுதியைச் சேர்ந்த அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளி மாணவர்களுக்கு இலவச மழை கோட்டுகள் வழங்கும் பணிகளை வேளாண் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார் இன்று தொடக்கி வைத்தார். உறுவையாறு அரசுப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு மழை கோட்டுகளை அமைச்சர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கணுவாப்பேட்டை, மங்கலம், மேல்சாத்த மங்கலம், மற்றும் அரியூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு மழை கோட் வழங்கப்பட்டது. புதுச்சேரியில் ஆண்டு தோறும் மழைக் காலத்தை

முன்னிட்டு அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச மழை கோட்டு வழங்கப்பட்டு வருகிறது.

*வைத்திலிங்கம்*

மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவை மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் இன்று நேரில் சந்தித்து காரைக்கால், பேரளம் இடையே பயணிகள் ரயில் இயக்குவது தொடர்பாக கோரிக்கை வைத்தார். மேலும் காரைக்கால் திருநள்ளாறு பகுதிகளில் இருந்து பல்வேறு முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் ரயில்களை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். இதுதொடர்பான கடிதத்தை மத்திய அமைச்சரிடம் அவர் வழங்கினார். அப்போது இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் உறுதி அளித்தார்.

*புதுச்சேரி-மின்துறை*

தீவிர மின் துண்டிப்பு மேற்கொள்ள இருப்பது குறித்து புதுச்சேரி மின்துறையின் கிராம தெற்கு கோட்ட அலுவலகத்தின் செயற் பொறியாளர் திரு உமேஷ் சந்ரா செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த விரிவான தகவல்..........

(வாய்ஸ்)

அரியாங்குப்பம், தவளக்குப்பம். கிருமாம்பாக்கம், பாகூர், கரிக்கலாம்பாக்கம், வடமங்கலம், திருவண்டார் கோவில், வாதானூர், கரியமாணிக்கம், மற்றும் கரையாம்புத்தூர் ஆகிய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு அலுவலகங்களுக்கு உட்பட்ட மின் நுகர்வோர்கள் தங்களுடைய மின் கட்டண நிலுவைத் தொகையை செலுத்தி மின் துண்டிப்பை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மின் கட்டண நிலுவை காரணமாக இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு நிலுவைத் தொகையை முழுவதுமாகவோ அல்லது தவணை முறையிலோ நண்பகல் 12.30-குள் செலுத்திய பிறகே மின் இணைப்பு அன்றே வழங்கப்படும் என்றும் திரு உமேஷ் சந்ரா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும், காரைக்கால் மாவட்ட மின்துறை செயற் பொறியாளர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் மின்கட்டண பாக்கி வைத்துள்ள மின்நுகர்வோர்களின் இணைப்புகள் வரும் புதன்கிழமை முதல் துண்டிக்கப்பட உள்ளதால் ஆன்-லைன் மூலமாகவோ அல்லது மின் கட்டண வசூல் மையங்களிலோ கட்டணத்தை செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் மின்துண்டிப்பு செய்யும் பணியை மேற்கொள்ளும் மின் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால்-கிளப்*

காரைக்கால் மாவட்டத்தில் செருமாவிலங்கை பகுதியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நியாய ஒலி கிளப் துவக்க விழா இன்று நடைபெற்றது. உயர் மற்றும் தொழில் நுட்ப கல்வி இயக்ககத்தின் வழிகாட்டுதலின் படி டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரியுடன் இணைந்து இந்த நியாய ஒலி கிளப் தொடக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவில் கலந்து கொண்ட புதுச்சேரி திட்ட இயக்குநர் டாக்டர் விஜயன் பேசும் பொழுது மாணவர்கள் சட்டம் குறித்து அடிப்படை அறிவை பெறுவதன் முக்கியத் துவம் குறித்தும் குடிமக்களின் உரிமைகள் மற்றும் மாணவர்களின் கடமைகள் குறித்தும் விளக்கமாக கூறினார். இவ்விழாவில் மாணவர்களுக்கு சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது. மேலும் காமராஜர் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆராமுதன், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

*யுவ பாரத்*

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான இளைஞர்களின் பங்களிப்பு திட்டத்தின் 2-ஆவது கட்டத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் இன்று தொடங்கி உள்ளது. இதில் நாடு முழுவதிலும் இருந்து 35 கல்லூரிகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும்

மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்கின்றனர். நாட்டை பல்வேறு துறைகளில் வலுப்படுத்துவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளும் வகையில் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் உள்ளிட்டவற்றிற்கு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்க இதுவரை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மை பாரத் இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர்.

கன்ஷியாம் திவாரி

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் செயல்பாடுகள் குறித்த விவாதத்தை பிஜேபி உறுப்பினர் திரு கன்ஷியாம் திவாரி இன்று மாநிலங்களவையில் தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் பண்டைய காலங்களில் இருந்தே இந்தியாவின் கலாச்சாரம் இயற்கை மற்றும் சுற்றுச்சூழலுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வனப் பகுதியை அதிகரிப்பது உள்ளிட்ட சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் அவர் பாராட்டினார். ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு அயோத்தி ராமிரெட்டி அல்லா விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் பொழுது நாட்டில் 60 கோடி மக்களை பாதிக்கும் வகையில் தண்ணீர் நெருக்கடி ஏற்படும் என்று நிதி ஆயோக் கணித்துள்ளது குறித்து கூறினார். மேலும் நீர்

பாதுகாப்பு என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதி என்றும் அவர் தெரிவித்தார்.

*ஜி-7 நாடுகள்*

ஈரான் உடனான அமெரிக்க இஸ்ரேலிய போர் நீடித்து வரும் நிலையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 அமெரிக்க டாலருக்கு மேல் உயர்ந்துள்ளதால் இதுகுறித்து விவாதிக்கும் வகையில் ஜி-7 நாடுகளின் அவசரக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. போர் நிலவரம் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது. இதற்கிடையே ஹார்முஸ் ஜலசந்தி வழியிலான எரிசக்தி விநியோகத்திற்கான தடை நீண்டநாள் நீடிக்கும் என்ற அச்சம் காரணமாக உலகளாவிய எண்ணெய் விலை இன்று ஒரு பீப்பாய்க்கு கிட்டதட்ட 120 அமெரிக்க டாலர் என்ற அளவை எட்டி உள்ளது.

*வானிலை*

தென் தமிழக பகுதி முதல் கடலோர கர்நாடகா வரை நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டத்திலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டத்திலும் இன்றும் நாளையும் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் வரும் 11-ஆம் தேதி முதல் 5

நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் சுகாதார கட்டமைப்பு கடந்த சில ஆண்டுகளில் வலுவடைந்து உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் மேற்காசிய நாடுகளில் நிலவும் தற்போதைய சூழ்நிலை குறித்து வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அறிக்கை தாக்கல் செய்தார்.

பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் கட்ட அமர்வு இன்று தொடங்கியது.

காரைக்கால், பேரளம் இடையே பயணிகள் ரயில் இயக்க வேண்டும் என மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவிடம் மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் கோரிக்கை வைத்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 9.3.2026/Script/.

-----------------------------